# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி: 044-29515590


**ஆணை நாள் – 16.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். NC.611/F/2024 (SA.15729/F/2021)

திரு D. மகேந்திரன் — மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
உளுந்தூர்பேட்டை - 606 107. — பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 12.08.2021 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 22.10.2021 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 21.09.2021 |
| முதல் மேல்முறையீட்டு அலுவலர் பதில் அளித்த நாள் | 28.10.2021 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 25.11.2021 |
| ஆணையத்தின் ஆணை நாள் | 22.12.2023 |
| மனுதாரர் NC மனு தாக்கல் செய்த நாள் | 04.09.2024 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (16.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு D. மகேந்திரன் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு சு. சக்திவேல், துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம், உளுந்தூர்பேட்டை என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், பசுமை வீடு திட்டத்தில் வழங்கப்படும் அரசு வீடுகள் தொடர்பாக தமிழக அரசின் அரசாணை (GO) நகல், பசுமை வீடு திட்ட

அரசாணையின் சட்ட விதிகளின்படி செயல்படாத அரசு அதிகாரிகள் மற்றும் பயனாளிகளின்மீது எடுக்கப்படும் நடவடிக்கையின் விவரம், பசுமை வீடு திட்டத்தில் கடந்த 2015-2016-ஆம் ஆண்டில் பயனடைந்த பயனாளியான திரு. ஆசைதம்பி, த/பெ. முத்து என்பவரின் பட்டா மற்றும் பத்திரத்தின் நகல், பசுமை வீடு திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கிய அதிகாரியின் விவரம், ஒப்புதல் பெறப்பட்ட பட்டா நிலத்தில் வீடு கட்டாமல் மோசடியில் ஈடுபட்டவர் மீதும், அதற்கு துணையாக செய்லபட்ட அரசு திகாரியின்மீது எடுக்கப்படும் துறை ரீதியான நடவடிக்கையின் விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 10 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு (SA.15729/F/2021) 22.12.2023 அன்று நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இவ்வாணையத்தால் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

***“ 4. அன்றைய (21.06.2024) விசாரணையின் முடிவில், மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு அறிக்கையினை அனுப்பிவைத்து, மனுதாரர் அவற்றை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட அறிக்கையின் நகல்கள் ஆகியவற்றை இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டிருந்தது”.***

4. இந்நிலையில், இவ்வாணையத்தால் 22.12.2023 தேதியிட்டு பிறப்பிக்கப்பட்ட ஆணையை பொதுத் தகவல் அலுவலர் நிறைவேற்றவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்கள் குறித்து நாளதுவரையில் தனக்கு முழுமையான தகவல்களை வழங்கவில்லை எனவும் தெரிவித்து, மனுதாரர் 04.09.2024 தேதியிட்டு இவ்வாணையத்தில் ஆணை நிறைவேற்றப்படாமை மனுவினை தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட ஆணை நிறைவேற்றப்படாமை மனு இன்று (16.04.2025) காணொளி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், ஆணையத்தின் ஆணைக்குட்பட்டு மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார்.

6. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், இவ்வாணையத்தின் ஆணைக்குட்பட்டு தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

***7. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் முழுமையான தகவல்களாக இல்லை என இவ்வாணையம் கருதுகிறது. எனவே,***

*பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவுகள் இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகின்றன :-*

- *மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக 'தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது.*

- *மேலும், இவ்வாணையத்தின் ஆணைக்குட்பட்டு, மனுதாரருக்கு நாளதுவரையில் முழுமையான தகவல்களை வழங்காத காரணத்தினால் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின்மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்படி நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் அதிகபட்சமாக ரூ.25,000/- (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)-ஐ தண்டத்தொகையாக ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான எழுத்து பூர்வமான விளக்கத்தினை இவ்வாணைக் கிடைக்கப்பெற்ற பதினைந்து நாட்களுக்குள் அப்போதைய பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து பெற்று இவ்வாணையத்திற்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைக்குமாறு விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஊராட்சி ஒன்றியம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் / தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகிறது.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.NC.611/F/2024 (SA.15729/F/2021)</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
உளுந்தூர்பேட்டை - 606 107,
விழுப்புரம் மாவட்டம்.

**<u>வழக்கு எண்.NC.611/F/2024 (SA.15729/F/2021)</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு D. மகேந்திரன்,
எண்.120/3, தெய்வீகன் தெரு,
பு. மலையனூர் அஞ்சல்,
உளுந்தூர்பேட்டை - 607 202.

Copy to: File
SNPS / 22.04.2025